**பொருளாதார நெருக்கடியின் தாக்கங்களைக் குறைத்து சமூக ஸ்திரத்தன்மையை மீட்டெடுப்பதற்கான பரந்த இணைப்பு மற்றும் அபிவிருத்தி செயற்திட்ட தற்செயல் அவசரகால பதிலளிப்பு (கூறு) (CERCs-2) - 2023**

---

பொருளாதார நெருக்கடியின் தாக்கங்களைக் குறைத்து சமூக ஸ்திரத்தன்மையை மீட்டெடுப்பதற்கான பரந்த இணைப்பு மற்றும் அபிவிருத்தி செயற்திட்ட தற்செயல் அவசரகால பதிலளிப்புக் கூறின் (CERCs-2) 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் உலக வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2021 நவம்பர் 03 ஆம் திகதிய 9290-எல்கே ஆம் இலக்க கடன் உடன்படிக்கையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

கடன் உடன்படிக்கையின் பிரகாரம் நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு மற்றும் தேசிய திட்டமிடல் திணைக்களம் என்பன செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவர்களாக உள்ளதுடன் மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்தல் அமைச்சு மற்றும் விவசாய அமைச்சு என்பன அமுல்ப்படுத்தல் முகவர்களாக உள்ளன. சமூக ஸ்திரத்தன்மையை மீட்டெடுக்கும் அதே வேளையில், நாட்டின் ஏழை மற்றும் பாதிக்கப்படக்கூடிய சமூகங்கள் மீது தற்போதைய பொருளாதார நெருக்கடியின் பாதகமான தாக்கத்தை குறைப்பதற்கு குறுகிய மற்றும் நடுத்தர கால தலையீட்டை வழங்குவதே செயற்திட்டத்தின் நோக்கங்களாகும். 2022/23 பெரும்போக பருவத்திற்கான யூரியா கொள்வனவு, சமுர்த்தி, முதியோர், ஊனமுற்றோர் மற்றும் CKDu நிகழ்ச்சித்திட்டங்களின் பயனாளிகளுக்கு காசுப் பரிமாற்றம் செய்தல் மற்றும் லிட்ரோ எரிவாயு கொள்வனவு ஆகிய 03 கூறுகளின் கீழ் இச்செயற்திட்டத்தின் செயற்பாடுகள் அமுல்ப்படுத்தப்படுகின்றன. கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 108,062 மில்லியனுக்குச் சமமான ஐ.அ.டொலர் 325 மில்லியன் தொகையானதுடன் உலக வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. செயற்திட்டம் அதன் செயற்பாடுகளினை 2022 மே 09 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2024 மே 09 அளவில் பூர்த்திசெய்யப்படுவதற்கு பட்டியலிட்டிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

செயற்திட்டத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிகளின் பயன்பாடுகள் கூற்றையும் அதன் காசுப்பாய்ச்சல்களையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிச் செயலாற்றல்

### 2.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் நிதி முன்னேற்றம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|
| 2023 ஆம் ஆண்டுக்கான செயற்திட்டத்திற்குத் தேவையான நிதியேற்பாடுகள் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டில் இருந்து ஒதுக்கப்பட்டிருக்காததுடன் ரூபா 12,642 மில்லியன் மொத்த நிதியேற்பாடு குறைநிரப்பு ஒதுக்கீடு மற்றும் நி.பி. 66 மூலம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. | வுழங்குநர்; லிவென் நியூரீயன்ற்ஸ் பிறைவேட் லிமிட்டட் மூலம் வழங்கப்பட்ட 27,987.02 மெற்றிக் தொண் உரம் 2022.12.22 இல் துறைமுகத்தை அடைந்த போதிலும் உலக வங்கி 2023.01.03 இல் அந்த விநியோகத்திற்காக பணம் செலுத்தியிருந்தது. எனவே, 2023 ஆம் ஆண்டில் அச் செலவினங்களைக் கணக்கிடுவதற்கு நிதியேற்பாடு செய்ய வேண்டியிருந்தது. மேலும், 2022 ஆம் ஆண்டில் திட்டமிட்டவாறு உரம் இறக்குமதி இடம்பெறாததால், 2023 இல் உரத்தின் மிகுதித் தொகையை கொள்வனவு செய்வதற்கு முடிவு செய்யப்பட்டது. எனவே, இதற்கு தேவையான ஒதுக்கீடு குறைநிரப்பு ஒதுக்கீடு மற்றும் நி.பி. 66 மூலம் ஏற்பாடு செய்யப்பட்டது. | செயற்திட்டங்களின் நோக்கங்களை வினைத்திறனாக நிறைவேற்றும் வகையில் பாதீட்டு மதிப்பீட்டில் இருந்து நிதியேற்பாடு ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 2.2 நிதிகளின் பயன்பாடு

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | இச் செயற்திட்டத்தின் கீழ் யூரியா உரம் கொள்வனவு செய்வதற்கு ஐ.அ.டொலர் 110 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அதிலிருந்து 2023 திசெம்பர் 31 அளவில் ஐ.அ.டொலர் 100.13 மில்லியன் மாத்திரமே பயன்படுத்தப்பட்டுள்ளது. | இணங்கப்பட்டது. | ஒதுக்கப்பட்ட நிதிகளை அதிகபட்சமாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | மத்திய வங்கியால் பேணப்படும் செயற்திட்டத்தின் கணக்குகளின் பிரகாரம் ரூபா 1,698 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 5,226,053 | இணங்கப்பட்டது. அதன் பிரகாரம் இந்த செயற்திட்டத்திற்கான மீதமுள்ள நிதி, அசல் | ஒதுக்கப்பட்ட நிதியை அதிகபட்சமாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட |

| | | | |
|---|---|---|---|
| | செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படாமல் கடன் வழங்கும் முகவரிற்கு திருப்பி அனுப்பப்பட்டிருந்தது. | ICDP செயற்திட்டத்திற்கு மீளளிப்பதற்கு உலக வங்கிக்கு திருப்பி அனுப்பப்பட்டது. | வேண்டும். |

3. **பௌதீக செயலாற்றல்**

| | கூறு | | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| (அ) | சமுர்த்தி, முதியோர், ஊனமுற்றோர் மற்றும் CKDU நிகழ்ச்சித்திட்டங்களின் பயனாளிகளுக்கு காசுப் பரிமாற்றங்களை வழங்குதல். | (i) | செயற்திட்டத்தின் கீழ் காசு ரியங்களை (சமுர்த்தி, யோர், சிறுநீரக நோய், ரமுற்றோர் படிகள்) ங்குவதற்கு ஐ.அ.டொலர் மில்லியன் ங்கப்பட்டிருந்த போதிலும் ல் இருந்து 2023 திசெம்பர் அளவில் ஐ.அ.டொலர் 140 லியன் மாத்திரமே ர்படுத்தப்பட்டிருந்தது. வும், மேற்படி காசு ரியங்கள் தொடர்பான ாளிகள் பட்டியல் ற்திட்ட ஒருங்கிணைப்புப் பால் திப்படுத்தப்பட்டிருக்கவில்லை | இச்செயற்திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கான கொடுப்பனவு சமுர்த்தி வங்கியின் ஊடாக மேற்கொள்ளப்பட்டது. அதன் பிரகாரம், பயனாளிகளின் பட்டியல்கள் உட்பட அனைத்து கொடுப்பனவு தகவல்களும் செயற்திட்டத்தை அமுல்ப்படுத்தும் முகவர்கள்; சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் மற்றும் சமுர்த்தி வங்கியால் பேணப்பட வேண்டும். | ஒதுக்கப்பட்ட நிதியை அதிகபட்சமாக பயன்படுத்துவதற்கும் சரியான நபர்களுக்கு நிதி மானியங்கள் வழங்கப்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2022/23 பெரும்போகத்திற்கான யூரியா கொள்வனவு | (i) | விலைப்பட்டியல்களின் பிரகாரம், 2022/23 ஆம் ஆண்டு பெரும்போகம் மற்றும் 2023 ஆம் ஆண்டு யால பருவத்தில் விவசாயிகளுக்கு விநியோகிப்பதற்காக மொத்தம் 137,400 மெற்றிக் தொண் யூரியா உரம் கொழும்பு கொமர்ஷல் போர்ட்டிலைசர் கம்பனி லிமிட்டட் மற்றும் லங்கா போர்ட்டிலைசர் கம்பனிக்கு வழங்கப்பட்டுள்ளது. எனினும் தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் கணக்காய்விற்கு வழங்கிய தகவலின் பிரகாரம், இறக்குமதி செய்யப்பட்ட யூரியா உரத்தின் அளவு 137,848 மெற்றிக் தொண் ஆகும். அதன் பிரகாரம் யூரியா உரத்தில் 448 | விவசாய மற்றும் பெருந்தோட்ட அமைச்சு அந்த உர விநியோகம் தொடர்பான உண்மைகளை 2023 நவம்பர் 22 இல் நடைபெற்ற கூட்ட கலந்துரையாடலில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களின் பிரகாரமும் TOD கடித இல. எஸ்எம்எவ்ஐ/3/டி/06/08 உலக இல. எஸ்எம்எவ்ஐ/3/டி/06/08 உலக வங்கி Vol V இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறும் 2023.11.29 ஆம் திகதிய ரீஓ/எஸ்எல்&ரீஜீ/01/37/02 ஆம் இலக்க கடிதம் மூலம் திறைசேரி செயற்பாடுகள் | சரியான தகவலைத் தெளிவுபடுத்துவதற்கும், எதிர்பார்த்தவாறு விநியோகம் இடம்பெற்றதா என்பதை உறுதிப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மெற்றிக் தொண்கள் சரிபார்க்கப்படாத வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | திணைக்களத்திற்கு எமது திணைக்களத்திற்கான பிரதியுடன் சமர்ப்பித்துள்ளது. | |
| (ii) | 137,848 மெற்றிக் தொண் யூரியா உரங்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும் செயற்திட்ட ஒருங்கிணைப்புப் பிரிவால் 123,540 மெற்றிக் தொண் மாத்திரமே உறுதி செய்யப்பட்டுள்ளது. எனவே, 14,308 மெற்றிக் தொண் யூரியா உரங்களின் சீரற்ற/ சரிபார்க்கப்படாத விநியோகம் அவதானிக்கப்பட்டது. மேலும், உர விநியோகம் தொடர்பான பயனாளிகளின் பட்டியல் கிடைக்கப்பெற்றிருக்கவில்லை. | அதன் பிரகாரம் இச் செயற்திட்டத்தின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட 137,848.33 மெற்றிக் தொண் யூரியாவில் 118,872.18 மெற்றிக் தொண் யூரியா விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும், விவசாயிகளுக்கு 18,976.15 மெற்றிக் தொண் மிகுதி தொகையை வழங்குவது குறித்த தகவல்களை வழங்குமாறு இத் திணைக்களம் கோரியுள்ளது. மேலும், 137,848.26 மெற்றிக் தொண் மொத்த தொகையில் 123,540.785 மெற்றிக் தொண் யூரியா விநியோகம் தொடர்பான அனைத்துத் தகவல்களும் இந்தத் திணைக்களத்திற்கான பிரதியுடன் ஏற்கனவே உலக வங்கியிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், மீதமுள்ள 14,307.255 மெற்றிக் தொண்களுக்கான தகவல்கள் 2024.06.18 ஆம் திகதிய என்பி/சீஈஆாஎஸ்/2/2022/ஏஜீஆர்ஐ ஆம் இலக்க எனது கடிதம் மூலம் கோரப்பட்டது. | எதிர்பார்த்தவாறு சரியான நபர்களுக்கு விநியோகம் மேற்கொள்ளப்பட்டதா என்பதை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |